ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் ராமாயண காவடிச்சிந்தென வழங்கும்

இராமாயணத்
திருப்புகழ்ச்சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

இவை

திருச்சிருப்பள்ளிஜில்லா ஜெயங்கொண்ட சோழபுரம்
ம-ள-ள-ஸ்ரீ, வாசுதேவக்கோனார் அவர்கள் குமாரர்
கிருஷ்ணசாமி கோனாரால்

இயற்றியதை,

கும்பகோணம்-புஸ்தகஷாப்

கே. வி. கதிர்வேல் பிள்ளையால் பரிசோதித்து,

கும்பகோணம்-புஸ்தக வியாபாரம்,
கோ. சீனிவாசப்பிள்ளையின் விருப்பத்தின்படி,

பெ. ஆறுமுகமுதலியாரால்,
சென்னை:
முராஹரி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

ஒன்பதாம் பதிப்பு.

1920.

)தன் விலை] [அணா 2.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமத் ராமாயணத் திருப்புகழ்
இமிடேஷன் பதிப்பு.
புத்தக அறிக்கை.

திருச்சிராப்பள்ளி ஜில்லா ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமிக்கோனார் அவர்களால் இயற்றிய இராமாயணத் திருப்புகழ்ச்சிந்து காவடிச்சிந்து வர்ணமெட்டு என்னும் எமது அபூர்வ புத்தகத்தை வாங்கிவாசிக்கும் நண்பர்களுக்குத் தெரியப்படுத்துவது யாதெனில்:—

நண்பர்காள் மேற்கூறிய இராமாயணத்திருப்புகழ்காவடிச்சிந்து என்னும் புத்தகத்தை ஷை கிருஷ்ணசாமிக்கோனார் அவர்களால் இயற்றப்பட்டு, பெரம்பூர் - ஆறுமுக முதலியாராகிய என்னால் சுமார் ஆறுபதிப்புகள் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டு, உலகமெங்கும் பிரசித்தியடைந்து யாவராலும் புகழப்பெற்று வருவதும், இதற்கென கிடைக்கப்பட்ட நற்சாக்ஷிப்பத்திரங்களின் பெருமையும் யாவருக்குந் தெரிந்தவிஷயமே, ஆகையால் எமது வியாபாரத்தின் பொறாமையாலும், ஷை கோனார் அவர்களின் கவியை பங்கப்படுத்தவும் துர் எண்ணங்கொண்ட சிலர் புதிதாக ஸ்ரீமத்ராமாயண திருப்புகழ் என ஓர் "இமிடேஷன்" புத்தகத்தை அச்சிட்டு எமது வியாபாரத்தைக் கெடுக்க உத்தேசித்து அசுத்தமான பதிப்பாக அச்சிட்டு விற்றுவருகிறார்கள். ஆகையால் மேற்படி இராமாயணத் திருப்புகழ் புத்தகத்தை வாங்கவிருப்பமுள்ள நண்பர்கள் மேற்படி புத்தகத்தின் டைட்டல் பேஜியின்மேல் ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமிக் கோனார் இயற்றியதுதானாவென பார்த்து வாங்குவீரென நம்புகிறேன்.

இப்படிக்கு,

பெ. ஆறுமுகமுதலியார்.

நெ. 4, பெருமாள்கோவில்தோட்டம் 2-வது சந்து, சென்னை

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்,— ஸ்ரீமத் ராமாயண திருப்புகழ்ச்சிந்து என்னும் புத்தகத்தை வெண் தமிழ் நடையாக திருச்சினாப்பள்ளிஜில்லா ஜெயங்கொண்ட சோழ புரம் ம-ா-ா-ஸ்ரீ, வாசுதேவக்கோனார் அவர்கள் குமாரர் கிருஷ்ண சாமி கோனாரால் எழுதினதை பெ-ஆறுமுக முதலியாராகிய என க்கு சகல சுதந்திரம் கொடுத்துவிட்டபடியால் இதை என் அனு மதியில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகா தென கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ் டர் காபிரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

பெ-ஆறுமுக முதலியார்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

முகவுரை.

சகலமான பக்த சிரோன்மணிகளுக்கும், கல்விமான்களுக்கும் தெரிவிப்பதாவது, வித்வ விவேக கல்விக்களஞ்சிய கந்தனருள் பூர்த்தியடைந்த ம-ள-ள-ஸ்ரீ, ஸ்ரீமான்-சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் அவர்கள் கழுகுமலை சுப்பிரமணியர் மீதில்பாடிய காவடிச்சிந்தின் சந்தங்கொண்டும், திருவண்ணாமலையில் எழுந்தருளிய வரப்பிரசாத அருணகிரிநாதர் மால்மருகன் முருகன்மீதுபாடிய திருப்புகழின் சந்தங்களைக்கொண்டும் ஸ்ரீமத்-வைகுண்டநாதனும், உலகரட்சகனும் விளங்குகின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சத்திலொன்றை திருக்கைலாயத்தில் பார்வதிதேவிக்குப் பரமேஸ்வரன் உபதேசித்த தாரகப்பொருளான ராமநாம மந்திரத்தை வாய்ந்த ஸ்ரீமத் ராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்தென ஷை சந்தங்களுக்கு குறையாமல் அறியாத சிறுவனாகிய யான் இயன்றவரையில் எழுதியிருக்கிறேன்.

இங்ஙனம்,

ஜெ. வா. கி.

குறள்.

குழலினிது யாழினிது யென்பர்தம் மக்கள்
மழலைச்சொற் கேளாதவர்
எப்பொருள்யார் யார்வாய் கேட்பினு
மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் இராமாயண
திருப்புகழ்ச் சிந்து.

காவடிச்சிந்து வர்னமெட்டு.

விநாயகர் துதி-வெண்பா.

சந்திரஞ்சேர் பானுகுல துய்யன் ரெகுபதிமேல்
செந்தமிழால் கீர்த்தனங்கள் செப்புதற்கு—சந்ததமும்
சங்கரனா ரீன்றசுதன் தந்திமுக னானவுய
ரைங்கரனா ரிங்குறு ணை.

அனுமார் துதி-வெண்பா.

தென்னிலங்கை ராவணன்றன் சென்னிபத்தும் கொய்தரெகு
மன்னவனின் தூதனா மாருதியே—நன்னயஞ்சேர்
அஞ்சனையாள் புத்திரனே அற்புதமே கற்பகமே
வஞ்சமின்றி நீ துணையாய் வா.

விநாயகர் கீர்த்தனம்.

திருமால் மருகனே என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்

1. சிவனார்மகிழ் மகனே திக ழொளியே கஜமுகனே-அந்த
சேவற்கொடி யோனையீன்ற பூவைக்கிட பாகந்தந்த — சிவ

2. தவயோகிகள் குருவேயொளிர் தருவேதத்தினுருவே-வுன்
தாளிணைப் பணிந்தேன்பதத் தாளிணையெனக் கருள்செய் — சிவ

3. மனமுமிறங் கலையாமகிழ்ந் தெனையாளவுந் தொலையா-எழில்
மங்கையர் வல்லபைமகிழ் சிங்கார சுந்தரதீரா — சிவ

4. அநுதினமுந் துதிசெய்தேன் அன்புடனுன்பதமுய்தேன் புகழ்
அய்யனே மெய்யனேகுண தூய்யனே கிருஷ்ணனைக்காரும் - சிவ

அனுமார் பேரில் கீர்த்தனை.

இன்னமுமேனோடி மோடி என்ற வர்ணமெட்டு.

1. அம்புவி போற்றுங் கனவானே
அரிராகவதூத னனுமானே
நம்பிக்கையாயோர்ந்து ராமனுடன்சேர்ந்து
உம்பரிடுக்கத்தை அன்பாய் தவிர்த்தோனே அம்

2. வம்பனிராவணன்மாள வுயிர்
வஞ்சிஜானகிசிறை மீள
நம்பியசுக்ரீபன் நன்மகுடஞ்சூட
நானிலந் தன்னிலுதித்தாயே கொண்டாட அம்

3. பாரஅசோகவனத்தானே முற்றும்
பதறக்கதற முறித்தோனே
கோரஅரக்கரை கூட்டியெமலோகம்
சேரும்படிசெய்த சிங்காரதீரனே அம்

4. ஆரவாரத்துடனூற்றாய் அழி
யாதசிரஞ்சீவி பெற்றாய்
தாரணியிற்றமிழ் சோரமிலாதருள்
தாசர்கள்தாசனும் தாசன்கிருஷ்ணசாமி

மகாவிஷ்ணு ஸ்துதி.

திருவுற்றிலகுகங்கை என்ற வர்ணமெட்டு.

1. புகழ்வற்றிலகுலங்கை மகிபைக்கலங்குஞ்சிங்க
புனிதன் தவைத்த நாரணன்-எழில்
ஜனகிக்கினைக்தபரி பூரணன்-வுயர்
பூகார்ப்பணி யாதவக்குல மா மணி யான தற்பர
புகலற்கரிய பராக்ராமனே-வினை
அகலக் கனிமிருந்த நாமனே

2. குஞ்சுக்கினிமேக கருணைக்குணவிலாச
குமாரக் குமனுக்கொரு மாமனே-புகழ்
அமரர்க் காதளந்த பூமனே-அன்று
குஞ்சரக்கதி ரீபொனத்தந்த டவிடபபதி மோகியப்பெரு
குறையை த் தவிர்த்தந்த பாலனே-அரு
மறைகட்டெடுதியவந்த சீலனே

3. கருணைப்பெறநினைந்த அருணன்தனக்குசந்த
கருணைக்கடலெனுங்கார் வண்ணனே-மேரு
கிரியைக்குடைபிடிக்குங் கண்ணனே-அன்று
கானில்மாடுகளோடுகூடவே மேவிசென்றிடு தேவனாகிய
குமரக்காவிலங்குந் தூயனே-அரை
நிலையிற் புவிகலங்கு மாயனே

4. அருமைப்புலவர்சித்த மனதிற்களியிருத்த
அறிவிற்பாவமுத்தி நாதனே-அதி
விரைவிற்றுகிலளித்த பாதனே-எழில்
ஆயர்மாமனை மீதிலேவளர் சோதையர்க்கொரு சேயனாகிய
அருமைமிகுந்தகிருஷ்ண சாமியே-தமிழ்
பெருமையுணர்ந்தநல்ல நேமியே

ஸ்ரீவெங்கடாஜலபதி பேரில்

திருப்புகழ்.

சந்தம்

1. திருநாறுநாட்கள் கருவோடிருந்து உருவாய்த்திரண்டு
புவிமீதே
திகழாய்ப்பிறந்து கலையெதெரிந்து சிலவேட்கணைக்கு
ளாளாகி

2. அறிவேதவழ்ந்து மயலேமிகுந்து அதிலேகிடந்து
உழலாமல்
உன் அருளால்சிறந்து மனமேதிருந்த வருவாய்ப்பறந்து
சகமேரி

2. சருவேவுதிர்ந்த மரம்போலிருந்து சதியானிரண்யன்
மகனாரும்
ததியாளவென்று முறையாடல்தம்பம் தனிலேகிர்பை
புரிந்தோனே

4. அறமேமிகுந்த உருவாயமைந்த பரிவானசப்த
கிரிமேவும்
அலர்மேலுமங்கை மணவாளனான வடவெங்கடேச
பெருமானே

பெருமாள் சந்நிதியில் தேவர்கள் முறைப்பாடு.

பொன்னுலவு சென்னிகுள என்ற வர்ணமெட்டு.

1. ரஞ்சிதஞ்சேர் வஞ்சிதிரு கொஞ்சிடுங் குணாளனே
நாரணா கருணைவைத்துப்பாரய்யா பரி
பூரணா வுயிர்கொடுத்துகாரய்யா வெகு
நாசமுற்றிடு பாவிராக்ஷதர் மோசமிப்படி யாய்நடந்திட
நாங்களினி யெங்கவித முய்குவோம் இம்சை
தாங்கவில்லையே ஹரியென் செய்குவோம்

பெருமாள் தேவர்களுக்கிரங்கி அருள்கூறல்.

ஷை வர்ணமெட்டு.

1. தஞ்சமென வந்தவர்காள் அஞ்சவேண்டாம் உங்களுக்கு
சஞ்சலந் தருந்துயரைப்போட்டுவேன் அரக்கர்
துஞ்சவே வகைவாளியிலெல்மாட்டுவேன் இந்த
தரணியிற்புகழ் பெருமைதங்கிய தசரதர்க்கொருசுதனெனச்சுப
ஜென்மமு மெடுக்கிறேனிங்கேயாமே உங்கள்
துன்பமுமகற்றுவேனவனேரமே

பாலகாண்டம்

விஸ்வாமித்திர மகாரிஷி தன்னுடைய வேள்வி முடிவதற்காக தசரதரிடம் வந்து ஸ்ரீராமரைத் தாவென்று கேட்பது.

ஆறுமுகவடிவேலவனே என்ற வர்ணமெட்டு.

1. நாடோர்புகழ்பெருங் கீர்த்தியேராஜருஷியே-உனை
நம்பிவந்தேனெனக் கின்பமாய்த்தந்தருள் ராமனையித்தினியே

2. தாடகைப்பாவி தவிற்குறுள்வேள்வியை தாமசம்செப்பாதே
இந்த-தாரணியிற்பெருங்கீர்த்திகளுற்றிடும் தந்திடிலிப்போதே

3 உம்பர் விசாரமொழிக்க அன்னேரமே சம்பரனைக்கொன் [றுயே-அந்த
அன்புதழைக்கவே ராமனைத்தந்தாலநேகம் பெருவாயே
4 கோபத்தில் ருத்திரனுனே விஸ்வாமித்திரன் கோரிவந்தே [னுனையே-இந்த
ஆபத்தைக்காக்கவேவேணும் விரைவிலனுப்புவாய் நீயெனையே

தசரதர் ஷை ரிஷியிடம் ராமன் சிறுகுழந்தை யாதலால் நான்வந்து வேள்வியை முடிக்கிறேனென பதிலுரைத்தல்.

கண்ணுயிரம்படைத்த என்ற வர்னமெட்டு.

1. ஆபத்தெனவேவந்த கோபத்தினில்மிகுந்த
அவனிகலங்கிடுங் கவுசிகமாமுனி அய்யனே-அரை
நொடிதனிற்றுடகை மடியநொறுக்குறேன் மெய்யனே
2. பாபச்செயலறியான் கோபமேதுங்குறியான் அப்
பாவியையெவ்வித மாவிவிடுத்திடச் செய்குவான்-மூலைப்
பால்மணமாறலியே கணையேதென யெய்குவான்
3. சரியல்லவே நீ முறையதனையானெண்ண
சஞ்சலமாகித் தவிர்க்குதே யென்னுடல் ஆவியே-என்
தனையனைப்பிரிந்திடில் நீங்குமே யென்னுயிர் மேவியே

வசிஷ்டர் தசரதரிடம் ஸ்ரீராமனைக் கவுசிகர் பின்னுல் அனுப்பினுல் மோசம் வருதென நன்மொழி கூறல்.

ஷை வர்னமெட்டு.

1. மோசம்வராது சொன்னேன் கோசிகனுடன் பின்னே
முகமலர்வொடு ரெகுபதியெனு மகிபனைக்கூட்டுவாய்-அம்
முனிவனுலருள் மிகுமகுடமுஞ் சடுதியிற் சூட்டுவாய்

தேவர்கள் முறைப்பாடு.

ஜோர் ஜோர் என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

பல்லவி.

1. க்ஷீராப்தி சயனனான தேவனே காரும்

அநுபல்லவி.

தேவனான தேவனே நீ திருவருள்புரி கருணையுடனே (க்ஷீ)

சரணம்.

1. கோர அரக்கர் செய்யுங் கொடுமை
குறைகளனைத்தும் முறையிட்டோமே (க்ஷீ)

2. அடைக்கலமென் றோடிவந்தோம்
அபயமபயம் ஆதரிப்பாய் (க்ஷீ)

அயோத்தியா காண்டம்.

இலக்ஷ்மணன், ஸ்ரீராமருக்கு தானே மகுடங் கொடுக்கிறேன் என்று கோபத்துடன் கூறல்.

வெள்ளிமலை யொத்த பலமேடை என்ற மெட்டு.

நான்தருவேன் ராமனுக்கு மகுடம் என்ன
ஞாயமோ பரதனுக்குக் கிரீடம் நிலை
நாட்டினோரைக் காட்டிடிலோ வாட்டியெம லோக
மனுப்பிடுவேன் வதைத்திடுவேன்

2. சேனைபேர் போர்வீர ரென்னைக்கூடி ஜெயம்
பெற்றிடவே வந்தாலுமே நாடி என்றன்
சித்திரக் கணையால் வென்று அத்தனை பேரையும்
கொன்று தீர்வேன் மனதாறுவேன்

குருடனோராஜமிழி மிழிக்கச் செய்யும்
கொள்கைபோலவே வுலகம் செழிக்கப் பட்டம்
கொள்ளுமோ பரதனுக்கு வெல்லுமோ ரவியின்
பனி நின்றே இதுமொன்றே

4. தாரதம்மியமறியாக் கோனே பெற்ற
தயரதனுக்கிடந்து தானே பூமில்
தத்தளித்தமுருகி பித்தனைப்போ லலைந்திட
நானே செய்குவேனே.

இலக்ஷ்மணன் கோபத்தை ஸ்ரீராமர் ஆற்றுதல்.

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற மெட்டு.

1. தம்பியுனக்கித்தனைகோபம் வந்ததுயேனே நொந்திடத்தானே
தாங்கவொண்ணாத மனஸ்தாபம் எங்குற்ற
தந்தைசொல்லிட மந்திரமில்லையென
முந்தியோர்களுகந்தபழமொழி
தாரணியிற் கேட்டதில்லையா தகப்பன்பேரை விளங்கும்சீரே
தன்மையா மிதிலென் சொல்லையா

2. இன்பமாய்ப் பயின்றவள்தானே நமைவிரும்பா மனமிரும்பா
இதனைநீ யறிந்திடா தேனே அடா
இனிமேலுனைக்கண்டபேர்கள் பழிக்கவோ
வினையமிதுவென சடலமொழிக்கவோ
இங்கருமை தந்தைவாக்கியம் சத்தியமென்றே மெத்தவுங்கொ
யேகுவதல்லோ சிலாக்கியம் (ண்டே

ஆரண்ய காண்டம்.

ஸ்ரீராமரைக்கண்டு தபசிகள் புகழ்தல்.

திருப்புகழ்.

இசைந்த ஏறும் என்ற வர்ணமெட்டு.

1. விரிந்தமார்பும் மரவுரிபோர்வையும் வெகுநேரு-அதில்
விளங்குநூலும் தகதகவென ஒலித்திடுசீரு
2. துறந்தசிலம் தவசிகட்கேபெருந் துணையாச்சே - நாம்
துலைக்கலாமினி யரக்கர்பயமதை துயர்போச்சே
1. இருண்டமேகம் வியாமளவர்ணம் இவர்திரேகம்-அருள்
இலங்குபாதம் அகலிகைமேலுற அதிபோகம்

4. பொருந்திலன் பரதனுக்காய்சுடர் முடிவேண்டி-மொழி
புகன்றகையை கவலைமாற்றிய பெருமாளே

தபசிகள் ஸ்ரீராமரிடம் அரக்கரால் படுந்துன்பத்தை முறையிடல்.

பூமி மெச்சிடும் என்ற வர்ணமெட்டு.

1. ரஞ்சிதலக்ஷ்மணன் வஞ்சியர்ஜானகி நாடவே
வந்தாய்கூடவே வினை யோடவே-உனை
நம்பிநாங்கள்செய்த யின்பமானதவம் நீடவேதுதி கூடவே
பஞ்சமபாதக வஞ்சகம் செய்துஷ்ட பாவிகள்
பொல்லாக்கோபிகள் படு லோபிகள்-அவர்
பண்ணும் இம்சைகளை யெண்ணிலின்னந்துய ராகுதே
அகம் வேகுதே

3. பூமிபாரந்தவிர்க்க நேமமுடனுதித்த பூமனே
நல்லசோமனே வுயர் நாமனே-வெகு
புண்யமுண்டுனக்கு கெண்யம் வைத்தருள்வாய் ராமனே
பரந்தாமனே

4. காமனைப்பயின்ற ஸ்ரீமந் நாராயணக் கர்த்தனே
பரிசுத்தனே அருள் முத்தனே-இந்தக்
காலமெங்கட்கனு கூலஞ்செய்யக்கிர்பை கண்ணனே
தாரும் வண்ணனே

ஸ்ரீராமர் தண்டகவன ரிஷிகளுக்கு அபயமீதல்.

செந்திமாநகர்வாழ் கந்தநாதனிரு என்றமெட்டு.

1. அஞ்சவேண்டாமுங்கள் சஞ்சலந்தவிர்ப்பேன்
ஆசீர்வாதந் துணையே அரக்கர்க்
குண்டென்கையிற் கணையே வினை
அகற்றுவே ஞனினியே கன
ஆவலோடிருந்து மேமகம் புரிந்து
ஆறுவீர்கள் முனியே

2. பஞ்சுபோலடித்து நஞ்சவே மடித்து
பாகுபோ லுருக்குறேன் அடி
வேர்களை நறுக்குறேன் அம்புக்
கிரையெனப் பொறுக்குறேன் சற்றும்

பதரிடாதிருங்கள் கதரிடாதிருங்கள்
பங்கிலேயிருக் கின்றேன்

3. மூதண்டமுற்றிலும் கோதண்டத்தால்
பழிமூட்டுவேனே படியில் பலம்
காட்டுவேனே நொடியில் எடுத்
தாட்டுவேனே பிடியில்
மூதாதையான பெரியோர்கள்போல்
முயலுவேனே வுங்களடியில்

சூர்ப்பனகி ஸ்ரீராமரைக்கண்டு மோஹித்தல்.

செந்தின்மா நகரந்தன்னில் என்ற வர்னமெட்டு.

1. இந்தமாமன்ன னோடு மெய்ந்நாளுமே
விந்தையதாய்க் கூடி நானே சுகம்
தந்திடவே செய்குவேனே இவன்
இகபரசுகமதனைத் தந்திடு மகமகிழ்
குணமீசனென்றிட
எந்தலோகத்துச் சுந்திரராஜனோ
இந்திரனோ சந் திரன் தானோ
எனக்கென்றே அயன் படைத்தானோ

2. கந்தமாமலர் வாசம் பொருந்திய
கற்பகவியாமள தேகன் எழில்
அற்புதனை நற் றாயன் இவன்
காலிலனுதினம் சிலமுடன்பணிந் தாலுமெனக்
கொருகாலு துயரிலை
கண்டவுடனென் அங்கமும் வாடுதே
காதலி யானினி வேறு ஒரு
காதனும் வேண்டிடேன் பாரில்

3. மாரவேள் தீரனானு மிவனின்
மார்புக்கிணையாகு வானோ வுயிர்
நேர்மைக்கிசைந்தவள் நானோ சீா
மந்தகாஸமிருந்த ரத்தின தந்திர
னிவனோடு யித்தினம்
மங்கையான் சொந்தநாயகி யாகினேன்

மனக்குறைபாவையும் விண்டேன் என்றழி
கனத்துரையை யின்று கண்டேன்

4. வீரமேமிகுந் தீரசிகாமணி
வேலைசூழும்புவி மேலே ஒரு
சீலனுங்காணேன் கண்ணாலே இந்த
வேந்தனின்பெ[illegible] சாந்தநற்குணம்
மாந்தர்க்கேயமைந்த பொற்பணம்
வேல்விழியானும் பாரினிலாரையும்
வேண்டிமனதினி லெண்ணேன் இவனே
தீண்டாவிடிலமு துண்ணேன்

மறுபடியும் சூர்ப்பனகி மோஹமுறல்.

அம்மா மதுரை மீனாட்சி என்ற வர்னமெட்டு.

1. அந்தமானகுண தீரன் என்
அறிவுக்கேற்ற மாரன் சிங்கார
அனங்கன்பணி வுதாரன்
அழகினிலொய் யாரன் (அந்த

2. சந்தமுநான் கூடி சீர்
சையோகத்தை நாடிக் கொண்டாலே
சாயுஜ்யமுற்றுங் கோடி
தவரிடாது மோடி (அந்த)

3. மைந்தன்கிருஷ்ணன் தமிழ்பாடி வுயர்
மன்னவுன்னைத் தேடி வந்தேனே
மங்கையானு மோடி
மருவவென்ன மோடி (அந்த

சூர்ப்பனகி ராவணனிடம் ஸ்ரீராமர் முதலானவர்களுடைய வரலாறுகளைக்கூறி சீதை யுனக்கே தகுந்தவளெனச் சொல்வது.

திருப்புகழ்—வங்கார மார்பிலணி என்ற வர்னமெட்டு.

சிங்காரமார்பினொடு தேஜசுநிறைந்தவெழில்
சந்தோஷமாகயிரு பேர்களொருதையலுடன்
சிந்தாகுலங்களறும் பஞ்சவடிதீரமதில் மகிழ்வாக

2. தீராதிதீரனென தேவர்களைப்போலவர்கள்
மாருதநாமமுயர் லெட்சுமணராமனென
தீயாதகாந்திஒளி வீசபிரகாசமுடன் கண்டேன் நான்
3. மாங்காதமாலையணி மாயனருள்நான்முகனும்
கொந்தாரமோககிளி யாரமொடு தோள்புரளும்
மாயாவிலாசமட மங்கையரை யெந்தவிதம் புவிமேலே
4. உண்டாக்கினனோ அறியேனவளைநீயுமினி
கண்டாலுமுன்றன்கலி தீருமிதுவுண்மையென
உத்தாரமேதுமொழி யாமலினிநீயவளை தொடர்வாலே

மாரீசன் ராவணனை யிடித்தல்.

பாதிராத்திரி வேளையில் என்ற வர்னமெட்டு.

1. என்னயோசனை பண்ணினாயடா
ஏற்குமோ இந்த புத்தி நின்று
காக்குமோ தெய்வம் சத்தி வும்பர்
யாவருமுன்னைப் பற்றி
புவியெங்குமே பழியோங்கவே
மொழிவாரடா அப கீர்த்தி
2. மண்ணுளோர் துதிராமனாகிய
மன்னனார் தேவியாலே வெகு
பின்ன மாகு மென்மேலே ஆசை
யெண்ணிடாதே மண்மேலே கெடும்
மாயமோக விலாசமே யிதை
மறந்திடில் நல்ல வேலை
3. முந்தி யிந்திரன் அகலிகை மீது
மோகமாகியே தொட்டான் மனம்
நோகவே பழி பட்டான் சந்திரன்
வேகவே கலை கெட்டான் அந்த
முறைமையாவையு மறையுநீயொரு
மூடன்போ லுரைத் திட்டாய்
4. அந்தநாள் கரதூஷணர் சென்று
மிந்தனரங்கு கோனே தங்கைக்
கருந்தது மூக்குந்தானே அதை

அறிந்திடா   தின்னமேனே வுன்னல்
அங்கு யானேகில் தங்குவதேது
அழிவதேவுண்மை   நானே

பொய்வேடங்கொண்டுவந்த மாரீசனெனும் மானே பிடித்துத்தாவென்று சீதை ராமரிடம் சொல்வது.

ஆறுமுக வடிவேலவனே யென்ற வர்னமெட்டு.

சீதை சொல்வது.

1. போகுது பாரொரு மானதிவேகமதாகவே ப்ராணபதி
அதை-பூவைமகிழ்ந்திட தாவிபிடித்தருள் பூபதி யித்ததியே

ஸ்ரீராமர் சொல்வது.

2. பாகுமொழிபுகல் தோகையிளங்கொடி பங்கமிலாக் குயிலே
வெகு-பக்ஷமுடனுனக் கித்ததிதந்திடுவே னடியென் மயிலே

லக்ஷ்மணன் சொல்வது.

3. மானென்றுயெண்ணி மயங்கிடவேண்டாமதனிஜானகியாலே
நிஜ-மானல்லமாயமானகவந்த பாவிமாரீசனிக்காலே

ஜானகி.

4. ஏனேபிடித்திட தாமதமின்னமும் யேகிடுவீர் நாதா
இங்கு-இளையவர்வார்த்தையைக் கேட்டிடிலென்மன
மேங்கிடுமே-நீதா

ஸ்ரீராமர்.

5. சூழும்புவிதனிலெங்குசென்றாலும் சுருக்கிலதைப்பிடிப்பேன்
என்றன்-தோகையரேமனம் வாடிடவேண்டாந் துயரமனத
தவிர்ப்பேன்

லக்ஷ்மணன்.

6. ஏழைசொல்லம்பலமேற்குமோ கட்டளையின்படிசெய்வேனே
இனி-யென்னலாவதென்ன சொன்னேனிதின்பயன்யெவ்விதமோதானேன்

இஷ்கிந்தா காண்டம்.

அனுமார் மறைவாகநின்று ராமலக்ஷ்மணரைப் பார்த்து ஆலோசிப்பது.

சென்னிகுளநகர்வாசன் என்ற வர்னமெட்டு.

1. ஆரிவரோ அறியேனே வந்த
அற்புதமுங் குறியேனே இவர்
ஆவிற்குணவாரும்பயிர் தேயும்படியாகக்கடவா
தோர் நடவாதோர்

2. தீராக்கரைகொன்று ஜெயம்
பூரணவந்தாரோதான்வென்று இவர்
தேவர்க்கொருஆவற்பரி தாபக்குறையேகப்புவி
மேலே வந்தமாலே

3. கங்கையுதித்ததுபோலே வரக்
கண்ணினால்கண்டேனேசால இவர்
காலைப்பருவத்திற்கொரு வேளைக்குள்வேடங்கொளுங்
கர்த்தர் பரிசுத்தர்

4. துங்கமிருந்தசஞ்சீவி போன்ற
தோகைமயிர்சீதாதேவி சென்ற
துயரால்மனமிகவாடியே வந்தார்வீரைவாய்தேடியே
தூயர் மிருபாயர்

சுக்ரீபன் வராததைப்பற்றி ஸ்ரீராமர் கோபித்தல்.

பாதிராத்திரிவேளையில் என்ற வர்னமெட்டு.

1. என்னமாயமோ சொன்னசுக்ரீபன்
இன்னமும்வரக்காணேன் கெட்ட
எண்ணமோ ஒன்றுந்தோணேன் தம்பி
எவ்விதமறியேனே அவன்
ஏற்றமென்னமோ கேட்டுவந்தெனக்
கியம்புவாய் கொடிதானே

2 அண்ணன் வாலியைக்கொன்ற அம்புபோல்
ஆயிரங்கணையுண்டு அதை
அறியாமல்மதங்கொண்டு வீணாய்
அழியாதேமூடாவென்று வெகு
ஆக்கிரமத்துடன் தாக்கிடப்புகன்
றறிந்துவாபதிவின்று

சுந்தரகாண்டம்:

சீதை தன் துயரத்தை திருச்சடையிடம் முறையிடல்.

திருப்புகழ் மலடிவயிற்று என்ற வர்னமெட்டு.

சீதை சொல்வது.

1 மங்கையேதிரிச்சடையே நானேதுயர்
பொங்குதேயென்செய் திடுவேனே-என்
மன்னவனைப்பிரிந் தினந்தானே பூவிலிருந்தேனே

திரிச்சடை சொல்வது.

2 நங்கைஜானகியேவாடாதே ஒரு
பங்கமும்வந்தணுகிடாதே-கெட்ட
ராட்சதர்கொட்டமும் நீடாதே துயராடாதே

சீதை சொல்வது.

3. பாவியிருப்பிட மறிவாரோ அவள்
ஆவியிராதெனக் குறிவாரோ-அன்றி
பார்த்திடலாமென வருவாரோ மனதெவ்வாறோ

திருச்சடைசொல்வது,

4. தேவியுன்சஞ்சலமாறிடவே படு
பாவியைக்கொன்றுக் கூறிடவே-வுனை
தேடியநாதனும் வந்திடுவார்நீயும் தேரிடவே

இராவணன் சீதையைக் கெஞ்சல்

கருவினுருவாகிவந்து என்ற வர்னமெட்டு.

1. பாவையுனேயேநினைந்து சூழமையலால்மெலிந்து
பாவிழிகவேகலிந்து துயராகி

பாசமதிலேமிருந்து ஆசைவெகுவாய்வளர்ந்துன்
பாகுமொழிமேலுகந்து வரலானேன்

2. தேவியெனையாதரித்து ஆவலதையேதவிர்த்து
தேறுதல்மனக்களிப்பு தருவாயே
தேஜசுநிறைந்தரத்ன மாசருவிலாஸசித்ர
சேலனசுகன்றகண்கொள் மடமானே

3. காவிமலர்பூக்கள்மீது தாவிவளர்வண்டினங்கள்
காரிகுளையொற்றகூந்தல் முடிமீது
காதலொடுஒன்றுகூடி ராகமதைநின்றுபாடி
காமரஸமென்றழைக்கும் வகையாலே

4. பாவிமதராஜனம்பு மேவியெனையண்டிவம்பு
பண்ணுமொரு யிம்சைதனை பாராயோ
பட்சமுடனென்னைவந்து யிச்சையுடனேயணைந்து
பற்பல சுகங்களின்பம் பெருவாயே

சீதை இராவணனை இடித்தல்.

திருப்புகழ் மலடிவயற்று என்ற வர்னமெட்டு.

1. ராட்சஸப்பதரே யேற்காதே அர
சாட்சியானதை தோற்காதே ரெகு
ராமன்தேவியைப் பார்க்காதே வாழ்வுபோக்காதே

2. ராவணனேகெட்ட படுபாவி என்மேல்
ஆவல்கொண்டாயேநா னொருநாவி குலம்
நாசமுறும்என் விருதாவிற் கெட்டலையாதே

3. ஆகூழியாய்க்கெர்வங்கொள்ளாதே வெகு
மாகூழியாய்ப்பதில் விள்ளாதே உன்
ஆள்கையுமினி நில்லாதே பாவம்பொல்லாதே

4. தீயுரைசொன்னநாக் கெரியாதோ பத்து
வாயிலும்புழுவாய்ச் சொரியாதோ அடா
தீனனே உன்தலைமுரியாதோ குடல்சரியாதோ

யுத்த காண்டம்.

ஸ்ரீராமர் யுத்தம் மகோதரன் சம்ஹாரம்.

வெள்ளிமலை யொத்தபலமேடை என்ற வர்ணமெட்டு.

1. பாவிமகோதரனேவாடா விடும்
பாணத்துக்கு ஓர்மொழிசொல்லடா நீயும்
பங்கப்படவேராவணன் பங்கிலேயிருந்துகுடி
கெடுத்தாய் இங்குஅடுத்தாய்

இந்திரஜித்து வதம்.

2. தேவர்களையேவதைக்கும் பித்தே கொண்ட
தீரனாய்பிறந்த இந்திரஜித்தே வுன்றன்
தேரையுமுறித்துகெட்ட பேரையுமழிக்ககணை
நானே விடுத்தேனே

ராவண சம்ஹாரம்

3. ராமபாணத்தைக்கரத்திலெடுத்தார் துஷ்ட
ராவணனைக்கொல்லவென்றுவிடுத்தார் கண்டு
ஈன்னையஞ்சேர் அந்தரத்தில் உன்னிதம்தேவர்களாலே
நிறைத்தார் அருள்நிறைத்தார்

விபீஷணன் ஸ்ரீராமரைப்பணிவதும் லங்கையை மூடிசூட்டிக்கொள்வதும்.

சக்தவரை வந்தருகநாதா என்றமெட்டு.

1. தொண்டர்பணி புண்டரீகத்துாயா துஷ்டர்க்
கண்டனம்புரியவந்தமாயா எழில்
சுந்தரிஜானகிமகிழ்நேயா
கனிவாயா மிருபாயா என்றன்
தொல்வினையகற்றிடுஞ் சகாயா

2. தெண்டனிட்டேன் முண்டனுடன்நானே ஒரு
ஜென்மமுமெடுத்தபாவி தானே வுன்
அண்டையிலிருக்கும் விதங்கோனே
பெருமானே ஸ்ரீமானே வெகு
அன்புடனருள்புரி பூமானே

ஸ்ரீராமர் லங்கையை விபீஷணனுக்கு முடிசூட்டல்.

3. சந்திரசூரியருள்ளகாலம் வரை
தந்தேனு னுனக்கிலங்கைசீலம் இனி
தந்தோஷமுடனே யெந்தநாளும்
அதையாளும் புகழ்நீளும்
தக்கசிரஞ்சீவியாய்மெண்மேலும்

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்.

பூமி மெச்சிடு என்ற வர்ன மெட்டு.

1. தாட்சியன்றி அரசாட்சிசெய்யராமச்சந்திரன்
அதிசுந்திரன் வெகுதந்திரன் அவர்
தம்பிமார்களோடு வும்பரும்புகழ
சாமரஞ்செய்தானிந்திரன்

2. காட்சிசேர்அயோத்தி மாட்சியாய்ப் பெருமைகாட்டினர்
முடிசூட்டினா பரைதீட்டினர் வெகு
காதலோடரம்பை மாதர்கள்நடனங்
கூட்டினர் துதிபூட்டினர்

3. தேசதேசமன்ன ராஜராஜன் தன்னந்தேறினர்
மனமாறினர் பதங்கோரினர் ராம
தேசிகர்க்குறிய ஆசிகள்பலவுங்
கூறினர்பத மேறினர்

4. மாசிலாதஅந்த தேஜசுநிறைந்தமங்கையாள்
மலர்ச்செங்கையாள்சீதைநங்கையாள் உடன்
மங்கலந்துலங்க துங்கமானசெங்கோல்
வாங்கினர் கையிற்றுங்கினர்

ஸ்ரீராமர் கீர்த்தனம்.

துமாரேத்து றகுவானு என்றவர்னமெட்டு.

பல்லவி.

ரெகுராமாத்துயர் ஆனேன் ஆதிமூலனே ரெகு

அநுபல்லவி

1. ஆதிமூலனேசீலனே ஆதவகுலபாலனே
மாதுஜானகிலோலனே மாரவேள்பிதாவே தஞ்சங்
காருங்காருமே, ரகு

சரணம்.

2. சாகரத்திடத்தகம்ஸ பாவியைக்கொன்றோனே பார்
முழுது முண்டவா ரகு

3. ஈரட்சரந்தனிலே சேர்ந்தப்பதிந்தவனே
நேராய்ப்பணியுமன்பர் நெஞ்சினிலிருப்பவா நிற்குண
மாயனே ரகு

4. பாற்கடல்மேற்றுயின்றாய் பாவைமகிழ நின்றாய்
கார்க்கக்ருடனேறி கண்ணுவருவாய் கிருஷ்ணசாமி
தாசனே ரகு

ஸ்ரீராமர் கீர்த்தனம்.

வெள்ளிமலைபொத்த பலமேடை என்றமெட்டு,

1. ஆதிமூலமென்றலரித்தானே நின்ற
ஆனையைக்கார்த்திட்டகுணவானே வல
காசைதனையேநெகிழ்ந்துன் பாசமதிலேபுகுந்து
நானே துதித்தேனே

2. வேதனையளித்தபிரகாசா திரு
விற்புருவநங்கையின் வுல்லாசா உயர்
வேந்தனெனவேசிறந்த சாந்தகுணமாஞ்சுக
விலாஸா ஜெகதீஸா

3. ராகவனேராகவனேயென்று அருள்
நாடிடுந்திருப்பதியேசென்று வினை
நம்பினவர்துன்பமதை யின்பமுடனேதவிர்க்குங்
கோனே பெருமானே

4. தேசமேபுகழும்ஜெயங்கொண்டம் கிருஷ்ணன்
செப்பியபதத்திலவைகுண்டம் அருள்
சேருமெனகூறுமொழி பாரிலுரைநீதிவழுவாதே
காரியப்போதே

ஸ்ரீராமர் கீர்த்தனம்.

(மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற மெட்டு.)

1. வேதமுடி மீதுறைவோனே விண்ணவரேற்ற மண்ணு
ளோர்போற்ற வேலைமீதிலே துயில்வோனே வுனை
வேண்டினேனுனை ஆண்டருள்பஞ்ச பாண்டவர்க்கருள்
பூண்டதற்பர வித்தகாநின் பொற்பதம் யானே
தினம்பணிந்தேன் மனந்துணிந்தேன்
வேதனையளித்த பெம் மானே

2. காதலிற்ஜானகி நேயா சிற்றன்னை வாக்கை அற்புதமாக்கி
காவனம்நடந்த ஓ தூயா அன்று
கடியமொழிபுகல் கொடியதாடகை மடிய
ஒருகணை நொடியிலெய்து
அக்காதகியைக் கொன்ற செவ்வாயா
இன்னமும் வாது யேனுமென்மீது
கற்பக வியாமளதேயா

3. நித்தமுஞ்சங்கீதக்கூட்டமே தொண்டர்கள்கூடிகொண்டா
டாடிப்பாடி நெஞ்சத்தின் கவலை ஓட்டமே துங்க
நிருபர்புகழ்குண செந்திலம்மாநகர்
முருகன்மேலொரு பில் சிந்துபாடிய நேசனுமண்ணுமலைதாசன்
வையகந்தன்னில் செந்தமிழைப்போல்
நேர்மையாய்செய்தான் கிருஷ்ணதாசன்

4. சித்திரவிமானமீதேறி பக்தர்விலாலன் சித்தர்வுலாசன்
தேடிடுந் தாசர்களைக் கோரி வுயர்
சேவைதரமனம் பாவிடபக்தர் மேவிபஜனைகள் கூவிட அங்கு
சேயன்கிருஷ்ண சாமிகூடவே
செந்தமிழாலே வைகுந்தன்மேலே
செஞ்சொலின் கீர்த்தனம் பாடவே

ஸ்ரீ வெங்கடாஜலபதி கீர்த்தனம்.

(அள்ளியள்ளி நீர்குடிக்கும் என்ற வர்ணமெட்டு.)

1. கங்குலகற்றுந்திரு வேங்கட்ட ரமணை
கண்டு தெரிசிப்பவர் பவமறுப்பவர் கண்டு தெரிசிப்பவர்

கலையனைத்தும் நொடியில்தொலைத்து
கதியையளிக்கும் புவியிற் ஜொலிக்கும் கந்

2. அங்குமிங்கும் புவியில் எங்கும் நிறைந்தவன்
அன்பர்க்கருள் புரிந்தவன் வனமிருந்தவன்
அன்பர்க்கருள் புரிந்தவன்
அந்தமிருந்தசோலையடைந்தஏழுமலையில்வாழுமுகுந்தன் கந்

3. செங்கைக்கினியநலச் சங்கமுங்கொண்டவன்
தேவர்புகழுமாண்டவன் ஆரம்பூண்டவன்
தேவர்புகழுமாண்டவன் தீராதிதீரன் ஸ்ரீரகுவீரன்
பாரையளந்தோன் சீரில்மிகுந்தோன் கந்

4. பங்கமிலாநர சிங்கமாய்வந்தவன்
பாமைமகிழநின்றவன் கனிதின்றவன் பாமைமகிழநின்றவன்
பாலகன்கிருஷ்ண சாமியையாளும்
சீலமிகுந்த ஆதிமூலனே கந்

மங்களம்.

எந்தனை தொந்தரையென்ற மெட்டு.

கண்ணிகள்.

1. மங்களமாஞ்செய மங்களமாம்சுப மங்களமாம் நித்யமங்களம்
மாருதநாமம் ஸ்ரீராமனுக்கு மங்களமாஞ்செய மங்களம்

2. நங்கையர்சீதா தேவியர்க்குமுயர் நலமுள்ள தம்பி மூவருக்கும்
நன்னயஞ்சேர்குருவசிஷ்டமகாமுனி நாதனுக்குஞ்சுபமங்களம்

3 கம்சலைகைகேசிசுமித்திரையோடு காரிகைதாய்மார்யாவர்க்கும்
கண்ணியமாக மண்ணினில்வாழி கண்டிடவே சுபமங்களம்

4. அம்ஸமும்ராஜ அம்ஸமேராம அம்ஸமெனு மிச்சரிதையினை
அன்புடன்படிப்போர் அறிவுடன்கேட்போர் அனைவர்க்கும்
மங்களம். மங்களம்.

திருப்புகழ் இராமாயணக் காவடிச்சிந்து

முற்.
